## தமிழ் மொழி - படிவம் 1

*பொதுக்கட்டளை: **கீழ்க்காணும் எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.***

1. தமிழில் உயிர் எழுத்துகள் மொத்தம் எத்தனை? ___________________.[2பு]

   i) உயிரெழுத்துகளில் குற்றெழுத்துகள் யாவை?

   ____________________________________________________[2பு]

   ii) உயிரெழுத்துகளில் நெட்டெழுத்துகள் யாவை?

   ____________________________________________________ [2பு]

2. குற்றெழுத்தைக் கொண்டு தொடங்கும் சொல்லைத் தெரிவு செய்க.[2பு]

   A. ஐவர்  C. அன்பு
   B. ஆசை  D. ஔடதம்

3. **ங், ஞ், ண், ந், ம், ன்**

   மேற்காணும் மெய்யெழுத்துகள் எவ்வகையைச் சார்ந்தவை? [ 2பு]

   ____________________________________________________

4. கீழ்க்காண்பவற்றைச் சேர்த்தெழுதுக. [4பு]

   i) ச் + ஊ = ___________  iii) ன் + எ = ___________

   ii) ப் + உ = ___________  iv) ட் + ஓ = ___________

5. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களிலுள்ள பிழைகளை அடையாளம் கண்டு அவற்றைத் திருத்தி எழுதுக. [3பு]

.

அ) மலேசியா இயற்கை வலம் நிறைந்தது.

ஆ) கடலின் அலைகள் கறையை மோதுகின்றன.

இ) ஆடுகள் பலவகையான இலை, தழைகளைத் திண்ணும்.

6. கீழ்க்காணும் மூதுரையின் பொருளை எழுதுக.[ 4பு ]

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

7. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் காலி இடங்களுக்கு ஏற்ற இரட்டைக் கிளவிகளைத் தெரிவு செய்க. [4பு]

| | | | |
|---|---|---|---|
| A. கட கட | B. கிடு கிடு | C. கல கல | D. மட மட |

அ). தாயின் முகத்தைக் கண்டவுடன் குழ்ந்தை ஸஸஸஸஸஸஸ.. எனச் சிரித்தது.

ஆ) தற்போது பெட்ரோலின் விலை ஸஸஸஸஸஸஸஸ.. என உயர்ந்து வருகிறது.

8. சரியான மரபுத்தொடரைத் தெரிவு செய்க. [6பு]

| | |
|---|---|
| A. செவி சாய்த்தல் | C. ஆணித்தரம் |
| B. வாழையடி வாழையாக | D. வெட்டிப் பேச்சு |

அ) பரதனின் குடும்பத்தினர் அந்தப் பலசரக்குக் கடையை ____________________ பல ஆண்டுகள் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

ஆ) 'ராக்கான் மூடா' திட்டம் ____________________________ பேசித் திரிந் இளைஞர்களிடையே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது எனலாம்.

இ ) தமிழரசன் இவ்வருடம் பி.எம்.ஆர். தேர்வில் சிறப்பாக தேர்ச்சி பெற்றால்தான் 'சிவாஜி' திரைப்படத்தைப் பார்க்கலாம் என்று அவன் தந்தை __________________ கூறி விட்டார்.

9. கொடுக்கப்பட்டுள்ள கவிதையைப் படித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை காண்க. [4பு]

கடமையைக் கண்ணாய் மதித்திடு,
மடமையைச் செயல்களை மிதித்திடு!
கற்றோர் மற்றோர் போற்றிடவே,
பெற்றோர் பாதங்கள் துதித்திடு!

நெஞ்சினில் துணிவைப் பெருக்கிடு,
வஞ்சகக் குணத்தை வெறுத்திடு!
தன்னலம் இன்றியே வளர்ந்திடு,
பொன்மனச் செம்மலாய் உயர்ந்திடு!

- கவிஞர் வி. அனுஷா

அ) இக்கவிதையின் கருப்பொருள் யாது?

A. கடமை
B. கல்வி
C. நற்குணம்
D. சுயநலம்

ஆ) இக்கவிதை உணர்த்தும் கருத்து யாது?

A. கல்வி கற்றிட வேண்டும்

B. மனிதன் வாழ்க்கையில் வெற்றி பெற நற்குணங்களைப் பெற்றிட வேண்டும்
C. பெற்றோரை மதித்திட வேண்டும்
D. எச்செயலையும் துணிந்து செய்திட வேண்டும்

10. கீழ்க்காணும் பனுவலை வாசித்து டத்தோ ஆறுமுகத்தின் சிறப்புகள் இரண்டனை எழுதுக.[2பு]



'சிலந்திமனிதன்' என்ற அடைமொழியைக் கொண்ட டத்தோ ஆறுமுகம் மலேசியக் காற்பந்து உலகில் 1970-களில் மிகவும் புகழ்பெற்று விளங்கியவர். மலேசிய தேசியக் குழுவின் கோல் காவலரான இவர் தனது அதிரடியான ஆட்டத்தின் மூலம் ரசிகர்களைக் கவர்ந்தார். தனது திறமையான ஆட்டத்தின் மூலம் தேசிய அளவிலான போட்டிகளிலும் உலக அளவிலான போட்டிகளிலும் மலேசியாவை வாகை சூட வைத்தார். 1980-இல் ரஷ்யா நாட்டின் தலைநகரான மாஸ்கோவில் நடபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கு மலேசியக் காற்பந்து குழு தகுதி பெறுவதற்குப் பெரும் பங்காற்றினார். டிசம்பர் 1988-இல் கார் விபத்தொன்றில் இவர் கொல்லப்படார்.

______________________________________________

______________________________________________

11. கீழ்க்காணும் சூழலில் உள்ளவர்களுக்கு நீ கூற விரும்பும் அறிவுரை யாது?.[3பு]






______________________________________________

12. கீழ்க்காணும் படத்தைப் பற்றிய உமது கருத்துரையை 30 சொற்களில் எழுதுக.[10 பு]

